உங்கள் தேர்வு கடிதத்தைப் பதிவிறக்கம் செய்வதற்கும் மற்றும் நீர் கல்வி ஆண்டு 2023/2024 இல் தெரிவான பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையவழி பதிவு செய்வதற்குமான வழமுறைகள்.

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ வலைத்தளத்திற்கு (www.ugc.ac.lk) பிரவேசியுங்கள்.

2. நீங்கள் ஏற்கனவே தேர்வு கடிதம், இணைப்பு I என பெயரிடப்பட்ட அட்டவணை மற்றும் தெரிவான கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தில் இணையவழி பதிவு செய்வதற்கான இணைப்பு II என பெயரிடப்பட்ட அறிவுறுத்தல்களை பதிவிறக்கம் செய்து வைத்திருப்பின், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ வலைத்தளத்தில் உள்ள "University Registrations 2023/2024" பெட்டியில் தரப்பட்டுள்ள "To directly proceed to registration" எனும் இணைப்பினை "click" செய்க.

3. மேலே குறிப்பிடப்பட்ட தேர்வு கடிதம் மற்றும் / மற்ற ஆவணங்கள் ஏற்கனவே பதிவிறக்கம் செய்து உம்மிடம் இல்லையென்றால், நீர் தேர்வு கடிதத்தைப் பதிவிறக்கம் செய்ய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ வலைத்தளத்தில் உள்ள "University Registrations 2023/2024" பெட்டியில் தரப்பட்டுள்ள "To download the Letter of Selection & proceed to registration" எனும் இணைப்பினை "click"" செய்க.

**"To directly proceed to registration"** இணைப்பினை **"click"** செய்திருப்பின்;

1. தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இணையவழி பதிவு செய்வதற்கான வழிமுறைகள் குறித்து ஏற்கனவே பதிவிறக்கம் செய்யப்பட்ட இணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

**"To download the Letter of Selection & proceed to registration"** இணைப்பினை **"click"** செய்திருப்பின்;

1. "Login" சாளரம் காண்பிக்கப்படும்.

   i. பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பத்தை நிரப்புவதற்காக உருவாக்கப்பட்ட பயனர் அடையாளம்(User ID) மற்றும் உங்கள் கணக்கின் கடவுச்சொல்லை(Password) உள்ளிடவும். உங்கள் பயனர் அடையாளம் என்பது கணக்கை உருவாக்க நீங்கள் பயன்படுத்திய மின்னஞ்சல் முகவரியாகும். நீங்கள் கடவுச்சொல்லை மறந்திருப்பின் கடவுச்சொல்லை மறந்துவிட்டீர்களா"Forgot Password" எனும் பொத்தானை அழுத்தி "click" செய்து உங்கள் கடவுச்சொல்லை மாற்றலாம்.

   ii. இப்போது உள்நுழைதல் "Login" பொத்தானைக் கிளிக் செய்க.

2. இப்போது உமது அடையாளத்தை சரிபார்க்க "Verify Your Identity" சாளரம் காண்பிக்கப்படும்.

   i. "Your NIC" கூண்டில், பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பத்தில் ஏற்கனவே நீர் வழங்கிய உமது NICயின் முதல் சில எண்கள் காண்பிக்கப்படும். ஏனைய எண்களையும், ஆங்கில எழுத்தையும் (ஏதேனும் இருப்பின்) நீர் நிரப்பவும். (பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீர் எந்த NIC எண்ணையும் வழங்கவில்லை என்றால், மீதமுள்ள எண்களையும், என்.ஐ.சியின் ஆங்கில கடிதத்தையும் நிரப்புவதற்கான கூண்டு உமக்கு காண்பிக்கப்படாது).

   ii. "Your Mobile Number" கூண்டில், பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பத்தில் ஏற்கனவே நீர் வழங்கிய தொலைபேசி எண்ணின் முதல் ஆறு இலக்கங்கள் காண்பிக்கப்படும். ஏனைய மீதமுள்ள நான்கு இலக்கங்களை நீர் நிரப்புக.

   iii. "Your Email Address" கூண்டில், பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தை நிரப்ப கணக்கை உருவாக்க நீங்கள் பயன்படுத்திய மின்னஞ்சல் முகவரி காண்பிக்கப்படும்.

குறிப்பு: உமது மேலே கூறப்பட்ட தொலைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி தற்போது பயன்பாட்டில் இல்லை/சேவையில் இல்லை என்றால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது உத்தியோகப்பூர்வ வலைத்தளத்தில் கொடுக்கப்பட்ட தொலைபேசி எண்கள் வழியாக பல்கலைக்கழக அனுமதிகள் திணைக்களத்தினை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

   iv. இப்போது "Submit" பொத்தானை அழுத்தவும்.

3. இப்போது நீங்கள் "OTP Verification" பக்கத்தைக் காண்பீர்கள். அப் பக்கத்தின் வலது பக்கத்தில், "Please click on the link sent to your email.Once you click on the link, an OTP will be sent to your mobile number" என்ற செய்தியும் அதில் காண்பிக்கப்படும்.

4. செய்தியில் குறிப்பிட்டபடி, உங்கள் மின்னஞ்சல் கணக்கிற்கு அனுப்பப்பட்ட இணைப்பைக் "click" செய்ய, மேலே 2(iii) இல் கொடுக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் கணக்கில் (log) உள்நுழைக.

5. பல்கலைக்கழக அனுமதிகள் திணைக்களத்தினால் அவ் மின்னஞ்சல் கணக்கின் உள்பெட்டியிற்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலை இப்போது காண்பீர்கள். "Please click here to generate OTP" எனும் "link"இணைப்பினை "click" செய்க.

6. நீங்கள் அந்த இணைப்பைக் கிளிக் செய்த பிறகு, மேலே 2 (ii) இல் நீர் பூர்த்தி செய்த தொலைபேசி எண்ணுக்கு ஒரு OTP அனுப்பப்படும். மேலே 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள "OTP Verification" பக்கத்திலுள்ள SMS குறியீட்டு பெட்டியில் அந்த OTP ஐ உள்ளிட்டு சமர்ப்பி"Submit" பொத்தானை அழுத்தவும்.

7. இப்போது "Selection Letters" பக்கம் காண்பிக்கப்படும்.

8. "Selection Letters" பக்கத்தில், நீர் தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி பற்றிய விவரங்கள் மற்றும் பதிவு செய்யக்கூடியதும், அதே தேர்வு கடிதத்தை பதிவிறக்கம் செய்வதற்கான இணைப்பு மற்றும் அந்தத் தேர்வு மற்றும் பதிவு தொடர்பான பிற ஆவணங்கள் ஒரு கோப்பு (file)வடிவாகக் காண்பிக்கப்படும். நீர் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கான கடிதத்தையும் பிற ஆவணங்களையும் அந்த இணைப்பைப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்யுங்கள்.